# தமிழ்ச்சோலை

அரையாண்டிதழ் மாணாக்கர் வெளியீடு

## Ruby Jubilee - 2024



மலர் : 14 செப்டம்பர் 2024 அரும்பு : 26

**தமிழாய்வுத்துறை**

**காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசியத் தர நிர்ணயக் குழுவால் (மூன்றாம் சுற்று) 'A' தகுதி பெற்றது)

ISO 9001 : 2015 சான்றளிக்கப்பட்டது.

**திருச்சிராப்பள்ளி – 18.**

## ஆசிரியர் குழு

முனைவர் ச. இராமலட்சுமி

முனைவர் அ. யசோதா

முனைவர்  மா. ஆசியாதாரா

திருமதி. பொ. அபிராமி

# Ruby Jubilee – 2024

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் | 3 - 18 |
| 2. | கட்டுரைகள் | 19 - 36 |
| 3. | சிறுகதைகள் | 37 - 48 |
| 4. | பொதுஅறிவு | 49 - 51 |
| 5. | பழமொழிகள் | 51 |
| 6. | பொன்மொழிகள் | 52 |
| 7. | விடுகதைகள் | 53 - 54 |
| 8. | மருத்துவக்குறிப்புகள் | 55 - 56 |
| 9. | ஓவியங்கள் | 57 - 60 |




# நல்வரவு

## கவிதைகள்

# விடை தெரியாத பயணம்

எங்கு தொடங்கியதோ இந்தப் பயணம் ....,
திட்டமிட்ட பயணம் என்றால்
என்றோ முடிந்திருக்கும்,
வெகு நேரப் பயணம் என்றால்
எப்போது முடியும் என
அசந்திருக்கும்,
தொலைவு தெரியவில்லை
முடிவு தெரிய விருப்பமில்லை
உன்னோடு தொடரும் இந்தப் பயணம் !!



வெ. அனிதா
*இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல்*

மலரைச் சந்தித்த தேனைப்போல
தேனைச் சந்தித்த வண்டைப்போல
கடலைச் சந்தித்த அலையைப்போல
அலையைச் சந்தித்த மணலைப்போல
உன்னைச் சந்தித்த நானும்
என் வாழ்வில் சில நொடிகளில்
பல மாற்றங்களை உணர்ந்தேன்

மணலில் கிறுக்கிய கிறுக்கல்கள் அழிந்துவிடும்
ஆனால், என் மனதில் கிறுக்கிய
உன் முகம் ஒரு பொழுதும் அழியாது.

உன்னை எனக்குப் பிடிக்கும் என்பதற்கு
நான் வைத்த பெயர் அம்மா.



ர. ஹேமலக்ஷ்மி
*இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் அறிவாற்றல்*

## கவிதைகள்

# தனிமை

பல ரகசியமும் பல ரசனைகளின் தொடக்கமும்
என்னுள் நடக்கும் எல்லையற்ற போராட்டம் இங்கே
பலரின் வெற்றியின் கூடாரம் ....

நிம்மதியின் சாயல் ....
பலரின் கண்ணீரைச் சுமந்து
துன்பமில்லா தேவையில்லா
ஒரு தாயின் மடிக்கு இணையாகிறது.

எந்த உறவுப் பிணைப்புமில்லாத ஒரு அமைதி கீதம்
ஒப்பற்ற என்னை ஒழுங்குபடுத்தும் ஆயுதமாய்
சில நேரம்

சில சமய வேண்டல்.... சில சமய வெறுத்தல்
நிம்மதியிலும் ஆறுதலிலும் என்னை
ஏற்றுக் கொள்ளும் ஓர் அழகிய நிலை
முகம் காணாத முடிவில்லாத் தனிமை.



செ. அபிராமி
*இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை*

# தன்னம்பிக்கை



நீ தேர்ந்தெடுக்கும் பாதை
கரடு முரடாக இருந்தாலும்
அதைக் கடந்துவிடலாம்
தன்னம்பிக்கை என்ற
நண்பனின் துணையிருந்தால்
எதையும் சாதிக்க முடியும்
ஜெயித்துக்கொண்டே இரு
நீ வளரும் வரை அல்ல
உன்னை வெறுத்தவர்கள்
உன்னை வாழ்த்தும்வரை
தன்னம்பிக்கையோடு போராடு .... !!

தெ. கலைச்செல்வி
*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# வெற்றி



பறக்கத் துணிந்தவன் பறக்கிறான் !!!
நடக்கத் தெரிந்தவன் நடக்கிறான் !!!
பேசப் புரிந்தவன் பேசுகிறான் !!!
நிற்காதீர்கள் – ஏதாவது
செய்து கொண்டே இருங்கள் – அப்போதுதான்
இந்த உலகம் புகழும் – இல்லையெனில்
உங்களை இகழும் !!!

செ. அபிநயா (எ) தமிழ்பாரதி
*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# இன்றைய இளைஞர்கள்

சோற்றுக்கே வழி இல்லை
சோனி எரிக்சனோடு போராட்டம் !
ஏறுபிடிக்கும் கலாச்சாரம் மறந்து
ஏர்செல்லோடு திண்டாடிக் கொண்டிருந்தாயே !

நோக்கத்தை மறந்துவிட்டு
நோக்கியாவோடு என்னய்யா பேச்சு
எதிர்காலம் புதைந்து கொண்டிருக்கிறது

நீ சாம்சங்கோடு இசைமழையில்
நனைந்து கொண்டிருக்கிறாயா !

நம் முன்னோர்கள்
போராட்டத்தின் வாரிசுகள்
இன்றைய இளைஞர்கள்
வோடபோனின் இரசிகர்கள் !


மாற்றம் வேண்டும் !
மாற்றம் ஒன்றே
வெற்றியின் முதல்படி.



கே. சுபா
*இளநிலை முதலாண்டு கணினி அறிவியல்*

# மரம் & காலத் தழும்புகள்

அது ஒரு காலம்
என்னிடம் இருந்த எல்லாவற்றையும்
இழந்துகொண்டிருந்தேன்.



யாருமற்ற தனிமை
ஏதுமற்ற வெறுமை
அது என் இலையுதிர்காலம்

பின் ஒரு காலம் வந்தது
என்னைச் சுற்றி எங்கும் வண்ணமயம்
என் தோட்டமெங்கும் மலர்கள், காய்கனிகள்
வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள்
கொண்டாட்டம், குதூகலம்
அது என் வசந்தகாலம்.

பின் கோடைக்காலம்,
மழைக்காலம், பனிக்காலம்
ஒவ்வொன்றிலும் வரவும், செலவுமாய்
பல அனுபவங்கள்



இப்போது என் உடலெங்கும்
ஏராளமான தழும்புகள்
வாழ்ந்த வருடங்களின்
நினைவுச் சின்னங்களாய்

தழும்புகள், பெருமைகள்
என்று ஆன பிறகு தெரிவதில்லை
காயங்களின் வலி.

ஆ. கீர்த்தனா
*உயர்நிலை இரண்டாமாண்டு வேதியியல்*

# கூண்டுக்குள்

சிறகடிக்க நினைக்கும்
பெண்ணின் உள்ளம்
கூண்டுக்குள் முடங்கியதே

உறவுகளின் பார்வையால் ...
எப்போது ஆவேன் சுவரில் ஓவியம்
இன்று நான் ஆனேனே சுவரில்
குழந்தைகளின் கிறுக்கல்களாய் ...

என்னைச் சுற்றிப் பல ஆசை
இன்று மூழ்கியதோ கடலுக்குள் ...
நீச்சல் அடித்தும் பயனில்லை
மூழ்க வைக்க பல பேர்கள்
எப்போது சிறகை விரிப்பேன் என்ற ஏக்கம்
என் கண்களில் அருவியாய் வழிய ...

ஏக்கத்துடன் காத்திருக்கிறேன்
கூண்டுகளின் பிடியில் ....



கா. கோகிலா
*இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்*

# நம்பிக்கை



கிழக்கில் உதிக்கும் சூரியன்
மேற்கில் மறைகிறான் எனினும்
மீண்டும் பிரகாசிக்கின்றான்
அவன் ஒளியால் அல்ல,
அவன் தன் மீது கொண்ட
நம்பிக்கையால்

உன்னை ஒதுக்கிட
கூடுவோர் யாராகினும்
முடங்கிட நீ நினைக்காத வரை,
உன்னைத் தோற்கடிக்க எவரும் வரப்போவதில்லை

தோல்வி காணாத வரை
உன்னை மெருகேற்ற முடியாது
வலிகளைத் தாங்கி வலிமை கொள்.

தோல்வியைத் தழுவியவர் ஒருபோதும் தோற்பதில்லை
தோல்விக்கான காரணத்தை
அடையாளம் காணாதவரே,
காணாமல் போகிறார்
தோற்றுவிட்டேன் என்று கூறிக்கொண்டு !

இ. வாசுகி
*இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல்*

## கவிதைகள்

# அம்மா

காலங்கள் மாறினாலும் நம் அம்மாக்கள் நம்மிடம்
கேட்கும் கேள்விகள் மட்டும் மாறவே மாறாது
எத்தனை முறை சண்டை போட்டாலும்
தேடிவந்து பேசும்
தெய்வம் என் தாயைத் தவிர
வேறெதும் உண்டோ இந்த உலகினிலே?
இழந்தவன் தேடுவதும் இருப்பவன் தொலைப்பதும்
தாயின் அன்பு !



**சீ. ஜீவிதா**
*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# பெண்



பெண்ணே! பெண்ணே ! பெண்ணே !
மண்ணையாளும் மண்புழு அல்ல நீ
விண்ணையாளும் வீராங்கனை நீ பெண்ணே !
கருவைச் சுமக்கும் கருவியல்ல நீ
புதிய சிந்தனையைச் சுமக்கும் ஆலம் விழுது நீ பெண்ணே !
சார்ந்து வாழ்பவள் அல்ல நீ
துணிந்து வாழும் துர்க்கை நீ பெண்ணே !
கூண்டிற்குள் வாழும் கிளியல்ல நீ
சூறையாடும் சிங்கம் நீ பெண்ணே !
நீயே என்றும் இந்த உலகையாளும் பராசக்தி !
வாழ்க நீ ! வாழ்க உன் புகழ் !
வளர்க உன் வீரம் !

**ஆ.அ. திவ்யா**
*இளநிலை முதலாண்டு இயற்பியல்*

## கவிதைகள்

# முருகன்



நெற்றிக்கண்ணில் பிறந்தவனே !
சரவணப்பொய்கையில் தவழ்ந்தவனே!
பழநி மலையில் நின்றவனே !
தகப்பனுக்குப் பாடம் கற்பித்தவனே !
சூரனை வென்றவனே !
குன்றத்தில் குடி கொண்டவனே !
கோபம் தணிக்க நின்றவனே !
அந்தத் தணிகையில் காதல் மணம் புரிந்தவனே!
பழமுதிர்ச்சோலை கிழவோனே ! – நீ
ஆறாக உருவெடுத்து அது ஒன்றாக
இணைந்து அந்த ஒன்றோடு இரண்டு
இணைந்து நின்ற அமுதே! – நீயே
எனக்கு முதற்பொருளே !

ஆ.அ. திவ்யா
*இளநிலை முதலாண்டு இயற்பியல்*

# விதி



வேடனின் அம்பு சீறிப் புறப்பட்டது
கிளையில் இருந்த ஒரு புறாவை நோக்கி
புறாவோ பறந்துவிட்டது
கணத்தில் மனத்தில் தோன்றியதோர் நினைப்பில்

இலைகளை உதிர்த்து அந்தரத்தில் பாய்ந்த அம்பு
மண்ணில் வீழ்கிறது தவளை ஒன்றைக் கொன்று !

புறா தப்பியதையும்
தவளை சிக்கியதையும் விதி
எனச் சொல்கிறோம்.

ஆ. கீர்த்தனா
*இளநிலை இரண்டாமாண்டு வேதியியல்*

**கவிதைகள்**

# ஏழ்மை மறையவில்லை

நிறைதொழில் நிறைந்த நாடு
நிதிவளம் பெற்ற நாடு
மறைமொழி தந்த நாடு
மதிவளம் கொண்ட நாடு

அகிலமே போற்றும் நாடு
ஆயினும் இந்த நாட்டில்
ஏழ்மை மறையவில்லை
இடைவெளி குறையவில்லை

சமூக வளர்ச்சி இல்லை
சாதி ஒழியவில்லை
ஒற்றுமை உணர்ச்சியில்லை
உதவும் கரங்களில்லை

தாய்மொழிப் பற்று இல்லை
தமிழனாய் வளரவில்லை
பயிற்றுதல் தமிழில் இல்லை
பணிமொழி தமிழா இல்லை



செ. மேகலா
*முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# என் அன்பான அம்மா



என் அன்பான அம்மா  என்னவள் அம்மா
என் செல்ல அம்மா
என் அம்மா எனக்கு வீரத்தமிழச்சி

எனக்காக வாழும் இதயமே !
உனக்காக நான் இருப்பேன் எப்போதுமே !

குயில் கூட கூவ மறந்துவிட்டது
உன் குரலைக் கேட்டு
மயில் கூட மயங்கிவிட்டது
உன் அழகைக் கண்டு
நீயும் உலகில் ஒருத்தி
என்று நினைத்தேன், பின்தான் புரிந்தது
நீதான் என் உலகம் என்று !!!
பல்லாயிரம் வார்த்தைகள்
இருந்தாலும், உன்னை வர்ணிக்க என்னிடம்
வார்த்தை ஆயிரம் உண்டு அம்மா ...

நான் வாழ்ந்த முதல் வீடு தாயின் கருவறை ....
நான் அமர்ந்த முதல் சிம்மாசனம் தாயின் மடி ....
நான் தூங்கிய முதல் பாய் தாயின் புடவை ....
நான் போர்த்திக்கொண்ட முதல் போர்வை
தாயின் அரவணைப்பு ....
நான் பாடிய முதல் பாட்டு அம்மா
நான் எழுதிய முதல் கவிதை அம்மா
நான் சீவிய முதல் சீப்பு
தாயின் கைவிரல்கள் ....
உயிர் உள்ள என் அம்மா !!



இ. ஆனந்தி
*இளநிலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்*

## கவிதைகள்

# காத்திருப்போம் !
## ஒரு பூவின் அழகைக் காண ...



பூக்க தாமதமாவதால்
அந்தச் செடி மலடி அல்ல
பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே
பூக்கும் குறிஞ்சிப் பூச் செடியாகக் கூட
இருக்கலாம்.


காத்திருந்து பார்ப்போம் !
காலங்கள் போன பின்பும் !
பூவே ! பூவே குறிஞ்சிப் பூவே !

தினமும் உன்னைக் காண வேண்டுமென்றே ...
நீ வரும் சாலையில்
எதிர்திசையில் இருந்து வந்து
உன்னைக் கடக்கிறேன் ... நீ என்னைப் பார்த்ததும்
உலகம் என் கை வசப்பட்டதாகக் ...
குளிர்கிறேன் ... உச்சி வெயிலிலும் ! தினமும் !

உன் ஒரு பார்வைக்குத் தினமும்
நான் கடந்து வரும் தூரமோ
பன்னிரண்டு கிலோ மீட்டர்
பார்வை படும் நேரமோ ஒரு வினாடி !!!
என்னவென்று சொல்வது
குறிஞ்சிப்பூவின் அழகை! மீண்டும் ஒருமுறை
சந்திப்போம், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ...

வெ.ச. சௌம்யா
*இளநிலை முதலாண்டு கணினி பயன்பாட்டியல்*

# கர்மவீரர் காமராஜர்



கள்ளம் இல்லா வெள்ளை மனம்
கதரை அணிந்த கருந்தேகம்
கல்வி என்ற சொல்லுக்கே
கண்ணியம் செய்த பெருந்தலைவரே !

தன் நலத்தை மறந்து
மக்களின் நலனை நினைத்து
நாட்டுக்காக வாழ்ந்த பெருந்தலைவரே !

முதல்வர் பதவி வகித்து
மதிய உணவு தந்து
கல்விக்கண்ணைத் திறந்த எம்தலைவரே!

நீ கருணை கொண்டாய்
காந்தியவாதியாய் !
கர்மவீரனாய் !
கண்ணியவானாய் !
சத்தியமூர்த்தியின் தளபதியாய் !
நெப்போலியனின் மாணவனாய் !
சூரியனும் சுழலும் பூமிப்பந்தும்
உள்ளவரை உம்புகழ் பாட மறவாது !!!

பா. நிஷாபாரதி
*இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல்*

## கவிதைகள்

# தன்னம்பிக்கை

எவன் ஒருவன் தோல்விக்கான காரணத்தைக்
கண்டுபிடிக்கிறானோ
அவனே வாழ்க்கையில்
வெற்றி பெறுவான்.

தோல்வியைக் கண்டு விலகாதே
எவன் தோல்வியை
எதிர்கொள்கிறானோ அவனே
வெற்றி பெறுவான்



நாளைய வாழ்க்கையைச்
சிறப்பாக மாற்றுவது
இன்றைய எண்ணங்களிலும்
செயல்களிலும்தான் உள்ளது.

உழைப்பு உண்மையாக இருந்தால்,
உயர்வு உன்னைத் தேடி வரும்.

சாதனை புரிய ஆசைப்படுபவன்
புத்தகத்தோடு இருப்பான்
சாதனை புரிந்தவன்
புத்தகத்தில் இருப்பான் ...

வாழ்க்கையின் வெற்றி என்பது
நினைத்தால் மட்டும் வராது
அதற்காக உழைத்தால் மட்டும் வரும் ...

ஆ. கீர்த்தனா
*இளநிலை இரண்டாமாண்டு வேதியியல்*

கவிதைகள்

# தமிழ்



வண்ணத்துக்கு நான் !!!
வானவில் நீ !!!
வாழ்பவன் நான் !!!
வழிகாட்டி நீ !!!
பாட்டுக்கு நான் !!!
பார்ப்பதற்கு நீ !!!
வேலைக்கு நான் !!!
வெற்றி வழிக்கு நீ !!!
காற்றுக்கு நான் !!!
கார்மேகம் நீ !!!
இசையாய் நான் !!!
வார்த்தைகளாய் நீ !!!
குழலோசை நான் !!!
ஒலியோசை நீ !!!
மனிதனாய் நான் !!!
எனக்கு மகளாய் தமிழ்த்தாயே நீதான் !!!
கடலோடு விளையாடு !!!
தமிழோடு சுவையோடு !!!
மேதைகளின் சொல்லோடு !!!
கனிச்சுவை பெற்ற கதிர்ச்சுடரே !!!
தனிச்சுவை பெற்ற தங்கமலரே !!!
கண்மணியைத் தூங்க வைக்கத் தாலாட்டு தந்தாயே !!!
குழவியின் குழலிசை கேட்டுப் பாராட்டு பெற்றாயே !!!

செ. அபிநயா (எ) தமிழ்பாரதி
*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# கவிதைகள்

## காமராஜர்



கல்லணை கட்டினான் கரிகாலன் !
பல்லணைகள் கட்டினார் காமராஜர் !

முல்லைக்குத் தேர்கொடுத்தான் பாரி !
கல்வி எனும் வேர் கொடுத்தார் காமராஜர் !

மயிலுக்குப் போர்வை அளித்தான் பேகன் !
மக்களுக்கு வேர்வை சிந்தினார் காமராஜர் !

மரம் வளர்த்தார், குளம் வெட்டினார் அசோகர்!
ஆலை அமைத்தார், மின்சாரம் அளித்தார் காமராஜர் !

தஞ்சைப் பெரிய கோவில் சாதித்தார் ராஜராஜசோழன்!
விஞ்சும் கல்விக்கூடங்கள் போதித்தார் காமராஜர் !

கம்பீர வீரத்திற்கு சத்ரபதி சிவாஜி !
கம்பீரத் தோற்றத்திற்குக் காமராஜர் !

தூக்குக் கயிற்றுடனே நேசம் அது கட்டபொம்மன்!
ஒன்பதாண்டு சிறைவாசம் இது காமராஜர் !

அரச வாழ்வு துறந்து துறவியானார் சித்தார்த்தர் !
துறவு வாழ்வு வாழ்ந்து அரசாண்டார் காமராஜர் !

இமயமிருந்து கல் எடுத்து வந்தான் செங்குட்டுவன் !
இமயம் வரை தன் சொல் கேட்க வைத்தார் காமராஜர்!

ராஜாதி ராஜன் நம் காமராஜர் !
ராஜனுக்கு ராஜன் நம் காமராஜர் !

ஜீவிதா
*இளநிலை முதலாண்டு உயிர் தொழில்நுட்பவியல்*

# காமராஜர் ஒரு சகாப்தம்

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- தோற்றம்
- தொண்டுகள்
- பண்பு நலன்கள்
- நம்பிக்கையின் நாயகம்
- கட்டாயக் கல்வி
- மின் திட்டங்கள்
- காமராசரின் ஆட்சிக் காலம்
- முடிவுரை



**முன்னுரை**

மனித குலத்துக்கும் நாட்டுக்கும் அருந்தொண்டாற்றிப் பாரத மக்களின் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்றவர் காமராசர் ஆவார். இளம் வயதிலிருந்தே நாட்டுச் சேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர் காமராசர். தொண்டு என்பதற்கு ஓர் உருவமாக விளங்கியவர். நான் போற்றி மதிக்கும் தலைவர்களுள் ஒருவராவார்.

**தோற்றம் :**

1903-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15-ஆம் தேதியன்று விருதுநகரில் குமாரசுவாமி - சிவகாமி அம்மாள் ஆகிய பெற்றோருக்கு மகனாய் உதித்தவர். சிறு வயதிலிருந்தே தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். எம்மான் காந்தி அடிகளின் தலைமையின் கீழ் நடந்த போராட்டங்களில் கலந்து கொண்டார். அதனால் பலமுறை சிறை சென்றார். இவருடைய நாட்டுப்பற்றும் தியாக உணர்வும் என் மனதைக் கவர்ந்தன.

# கட்டுரைகள்

## தொண்டுகள்

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் சாதாரணத் தொண்டனாகச் சேர்ந்து உழைப்பால் உயர்ந்தவர். ஏழை மக்களைக் கண்டு மனமிரங்கியவர். அதனால்தான் 1954-ஆம் ஆண்டு முதலமைச்சர் பதவி ஏற்றதும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பாரதியின் வாக்கை மெய்ப்பிக்க வேண்டித் தமிழகத்தில் அமைதியான கல்விப் புரட்சியை உருவாக்கினார். வீதிதோறும் இரண்டொரு பள்ளி என்று கூறுமளவுக்குப் பள்ளிகளைத் திறந்து அங்கு அனைவருக்கும் இலவசக் கல்வி தந்தார். கல்வி கற்க வறுமை குறுக்கிடுவதைக் கண்ட காமராசர் மதிய உணவுத் திட்டத்தைக் கொணர்ந்தார். இதனால் பள்ளி செல்லும் மாணவர் தொகை அதிகரித்தது. தமிழ்நாட்டினை அறிஞர்கள் நிறைந்த நாடாக ஆக்கினார். சாதிமதப் பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க அவர் விழைந்தார். கிராமங்கள் வளரவும், விவசாயிகள் துயர் துடைக்கவும் காமராசர் பல திட்டங்களைத் தீட்டி முறைப்படிச் செய்து முடித்தார்.

## பண்பு நலன்கள் :

காமராசர் கர்மவீரர், பேச்சைக் குறை! செயலை அதிகமாக்கு என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பவர். அரசியல் மேதையாகத் திகழ்ந்தவர். பாரத நாட்டுப் பண்பாட்டினை எந்நிலையிலும் விடாதவர். பெருந்தன்மை, எளிமை, வஞ்சனையற்ற உள்ளம், அஞ்சாமை ஆகிய பண்புகளின் உறைவிடம். பதவிப்பித்து அவரை எந்நாளிலும் ஆட்கொண்டதில்லை. இவரது தன்னலமற்ற தன்மைக்கு ஒரே எடுத்துக்காட்டு நேருஜியினால் பாராட்டப்பட்ட காமராசர் திட்டமாகும். அது, அரசியலில் முதியோர்கள் பதவி விலகி இளைஞர்களுக்கு வழி விட வேண்டும் என்பதாகும்.

## நம்பிக்கையின் நாயகம் :

நம்பிக்கையின் நாயகமாகத் திகழ்ந்தவர் காமராசர். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகில் ஒரு பார்வையற்றோர் பள்ளி இயங்கி வந்தது. தனியார் அறக்கட்டளையைச் சார்ந்த பள்ளி, அரசாங்கத்திடம்

ஒப்படைக்கப்பட்டது. பல ஏக்கர் பரப்பைக் கொண்டிருந்த அந்தப் பள்ளியின் வளாகம், அமைச்சர் ஒருவரின் பார்வையில் மாற்றிவிட்டால், அந்த இடத்தை வேறு ஒரு காரியத்திற்குப் பயன்படுத்தலாம் என்று அவர் திட்டமிட்டார். இதை அறிந்ததும் காமராசர் கொதித்துப் போய்விட்டார். மாற்றும் முயற்சியைத் தடுத்து நிறுத்தினார்.

அப்போது அவர் கூறினார். மற்றவர்கள் மேல் நம்பிக்கை வைக்காமல் நம்மிடம் நம்பிக்கையோடு கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்தப் பள்ளியை நடத்தாமல் போனால் மட்டும் நம்பிக்கைத் துரோகமல்ல, இந்த இடத்தை மாற்றினாலே நம்பிக்கைத் துரோகம்தான். அரசிடம் ஒப்படைக்கப்பட்ட அறக்கட்டளையே சரியாக நடக்கவில்லை என்றால் மற்றவர்கள் எந்த நம்பிக்கையோடு அறக்கட்டளைகளை நிறுவ முன்வருவார்கள். சாமர்த்தியமான பேச்சு நம்பிக்கையைக் காப்பாற்றாது. நாணயமாக நடந்துக்கணும், அப்போதுதான் நாலுபேர் நம்புவார்கள் என்றார் காமராசர்.

## கட்டாயக் கல்வி :

1960-இல் மாநிலத்தின் 3-இல் 1 பகுதியில் 6-11 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1961-இல் மாநிலத்தின் இன்னொரு 3-இல் ஒரு பகுதியில் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியாக 1962-இல் மீதமிருந்த ஒரு பகுதியிலும் கட்டாயக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

1960 முதல் கல்வித்துறை மூலமாகவே சீருடை வழங்க ஏற்பாடு செய்தார். பொது மக்கள் நல்லுதவியுடன் செயல்பட்ட சீருடைத்திட்டம் 5 ஆண்டுகளில் மும்மடங்காகியது. இதன் மூலம் பள்ளிப் பிள்ளைகளிடையே காணப்பட்ட ஏழை, பணக்காரன் என்கிற ஏற்றத்தாழ்வை ஒழித்துச் சமதர்ம சமுதாயம் உருவாக வழி வகுத்தார்.

## மின் திட்டங்கள் :

காமராசர் அரசு மின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் கிராமப்

பகுதிகளை மின்மயமாக்குவதிலும் அதிக சிரமம் எடுத்துக் கொண்டது. காமராசர் ஆட்சியேற்றபோது தமிழகத்தில் மேட்டூர், பைக்கரா, பாபநாசம் என்னும் மூன்று மின்னுற்பத்தித் தலங்கள் மட்டுமே இருந்தன.

காமராசர் பதவியேற்றதும், முதல் / இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு பெரிய மற்றும் சிறிய நீர்மின் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கினார். ஆனால் அரசின் வருமானமோ வெறும் 45 கோடி. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையோ 95 கோடி. பின்வருவன அந்நீர்மின்திட்டங்கள் ஆகும்.

குந்தா நீர்மின் திட்டம்

பெரியாறு மின் திட்டம், இது திருவாங்கூர் கொச்சி அரசோடு பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்டது.

கும்பார் – அமராவதி மின் திட்டம்

மேட்டூர் கீழ்நிலைத் திட்டம்

மோயாறு நீர்மின் திட்டம்

கூடலூர் நீர்மின் திட்டம்

அனல்மின் திட்டங்கள் :

நெய்வேலி அனல்மின் திட்டம்

சமயநல்லூர் அனல்மின் நிலையம்

சென்னை அனல்மின் நிலையம் (மூன்றாவது மின் உற்பத்திப் பிரிவு)

அணுமின் திட்டங்கள் :

கல்பாக்கம் அணுமின் திட்டம்.

குறிப்பாக பெரியாறு மின் திட்டம், குந்தா நீர்மின் திட்டம் முதலிய அதிக மின் உற்பத்தித் திறன்கொண்ட திட்டங்களை நிறைவேற்றி முடித்ததனால், காமராசர் அரசு கிராமப்புறங்களை விரைந்து மின்மயமாக்க முடிந்தது.

## காமராசரின் ஆட்சிக் காலம் :

காமராசரின் ஆட்சியின் இறுதியில் தமிழகம் தொழில் வளத்தில் வடநாட்டு மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தைப் பிடித்துவிட்டது. தொழில் துறைகளை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறு நடைமுறைகளைச் செயல்படுத்தத் தொடங்கியது காமராசர் அரசு. அவரின் ஆட்சியில் தொழில்துறை வளர்ச்சியின் பகுதி...

## பெரும் தொழில்கள் :

- ✦ நெய்வேலி நிலக்கரித் திட்டம்
- ✦ பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை (I.C.F)
- ✦ திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் (BHEL)
- ✦ ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை (HPL)
- ✦ கல்பாக்கம் அணுமின் நிலையம்
- ✦ கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை
- ✦ சங்ககிரி துர்கம் இந்தியா சிமெண்ட்ஸ்
- ✦ மேட்டூர் காகிதத் தொழிற்சாலை
- ✦ துப்பாக்கித் தொழிற்சாலை
- ✦ நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்
- ✦ சேலம் இரும்பு உருக்காலை

## விவசாயம் சார்ந்த தொழில்கள் :

காமராசர் பொறுப்பேற்றபோது (1953) தமிழகத்தில் புகலூர், நெல்லிக்குப்பம், பாண்டியராஜபுரம் ஆகிய 3 சர்க்கரை ஆலைகள் இயங்கி வந்தன. 1963-இல் மொத்தம் 14 சர்க்கரை ஆலைகளாக உயர்ந்தது.

திருச்சியில் 20 லட்சம் சக்தி கொண்ட எரிசாராய உற்பத்தித் தொழிற்சாலை துவக்கப்பட்டது.

**பிற தொழில்கள் :**

- ✦ நூல் நூற்பு ஆலைகள்
- ✦ துணிநூற்பு பாவுகள்
- ✦ 4 மிதிவண்டித் தொழிற்சாலைகள்
- ✦ 6 உரத் தொழிற்சாலைகள்
- ✦ 2 சோடா உற்பத்தித் தொழிற்சாலைகள்
- ✦ 21 தோல் பதனிடும் தொழிற்சாலைகள்
- ✦ ரப்பர் தொழிற்சாலைகள்
- ✦ காகித உற்பத்தி ஆலை
- ✦ அலுமினிய உற்பத்தி ஆலை

காமராசர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் புலிப் பாய்ச்சல் கண்டது என்பதை இதிலிருந்து நாம் அறியலாம்.

**விருதுகள் :** பாரத ரத்னா (1976)

**புனைப்பெயர் :**
- ✤ கர்மவீரர்
- ✤ கல்வித் தந்தை
- ✤ கருப்புக் காந்தி
- ✤ படிக்காத மேதை

**முடிவுரை :**

✦ ஏழைப் பங்காளர் – கர்மவீரர் காமராசர் எந்நாளிலும் நம் இதயங்களில் வீற்றிருக்கும் தலைவராவார். இன்ன காரணங்களினால் நான் போற்றும் ஒரே தலைவர் காமராசர் ஆவார். இக்கட்டுரையில் காமராசர் ஒரு சகாப்தம் என்பதை நாம் அறிந்தோம்.

தே. துர்காஸ்ரீ
*இளநிலை முதலாண்டு உயிர்தொழில்நுட்பவியல்*

# உழைப்பே உயர்வு

**குறிப்புச்சட்டகம்**

முன்னுரை
உயிர்களின் உழைப்பு
உழைப்பின் மேன்மை
உழைப்பால் உயர்ந்தோர்
உழைப்பின் முக்கியத்துவம்
முடிவுரை



## முன்னுரை :

வாழ்க்கைப் பயணத்தில் நாம் சாதனை எனும் சிகரத்தை அடைய நமக்கு வேண்டிய மூலதனம் உழைப்பு. தன்னையும் தன் நாட்டையும் உயர்த்தும் உழைப்பின் சிறப்பினை இக்கட்டுரையில் காண்போம்.

## உயிர்களின் உழைப்பு :

ஓர் அறிவு மட்டுமே உடைய மரம் தம் வேர்களை எங்கும் பரப்பி உணவைத் தேடி உண்கிறது. ஈரறிவு உயிர்களான நத்தையும் சங்கும் ஊர்வது உணவு தேடி உழைப்பதற்கே. மூன்று அறிவு உயிரான எறும்பின் உழைப்பு நமக்கெல்லாம் ஒரு பாடம். நான்கு அறிவு உயிரான வண்டு மலருக்கு மலர் தாவி உழைத்தால் தான் கூட்டில் தேனைச் சேர்த்து வைக்க முடியும். ஐந்து அறிவு உடைய பறவைகள், விலங்குகள் உணவைத் தேடிச் சென்று உண்டு வாழ்கின்றன. அதுபோல் நாம் வாய்ப்புள்ள இடத்தைத் தேடிச் சென்று உழைத்து உயர்வதே சிறப்பானது.

## உழைப்பின் மேன்மை :

கடின உழைப்பே நாம் வாழ்க்கையில் உயர்வதற்கு மிகவும் சிறந்த வழி. விலங்குகளோடு விலங்காகத் திரிந்தனர் நமது முன்னோர்கள். ஆனால் நாம் இப்போது விண்ணையும், மண்ணையும் ஆண்டு

கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் கோடிக்கணக்கான மக்களின் உழைப்பே ஆகும்.

**உழைப்பால் உயர்ந்தோர் :**

செருப்பு தைத்த ஸ்டாலின் ரஷ்ய அதிபர் ஆனார். வெடிமருந்தைக் கண்டுபிடித்த நோபல் தன் பெயரால் ஒரு பெரும் பரிசை நிறுவினார். செய்தித்தாள் விற்ற தாமஸ் ஆல்வா எடிசன் மின்னொளி கண்டுபிடித்தார். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட அம்பேத்கார் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தையே இயற்றினார். இப்படி உலக அளவில் மக்களைத் திரும்பிப் பார்க்க வைத்த அனைவரும் தங்கள் உழைப்பினை நம்பி உயர்ந்தவர்கள்.

**உழைப்பின் முக்கியத்துவம் :**

எப்போதும் வேலை செய்யத் தயாராக இருக்கும் மனநிலையில் உள்ள மனிதனை வெற்றி தேடி வருகிறது. எந்த ஒரு பணியையும் மிகவும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் செய்தால் நிச்சயம் வெற்றிக்கனியைப் பறிக்க முடியும். எத்தனை முறை தோல்வியைக் கண்டாலும் அதைப்பற்றிய கவலை மனதில் சிறிதும் இல்லாமல் உழைக்க வேண்டும்.

**முடிவுரை :**

சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்காமல் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக உழைப்பவர்களே வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய முடியும்.

**உழைப்போம் ... உயர்வோம் ...!**

**துன்பம் வரும்போதும்**
**இன்பம் வரும்போதும்**
**கூடவே இருக்கும்**
**ஒரே நண்பன் நமது உழைப்பு மட்டும்தான்.**

S. பிரியதர்ஷினி
*இளநிலை முதலாண்டு கணினி அறிவியல் அறிவாற்றல்*

**கட்டுரைகள்**

# காலம் பேசும் மாமனிதர் காமராஜர்



## குறிப்புச்சட்டகம்

முன்னுரை
இளமைக் காலம்
காந்தி தரிசனம்
படைக்கு முந்து
பூசல்களிடையே பூத்த பூ
மக்களின் முதல்வர்
கல்விப் புரட்சி
முடியாது... அது அகராதியில் கிடையாது
மின்னிய பொற்காலம்
விவசாயிகளின் ஒளிவிளக்கு
முடிவுரை

## முன்னுரை :

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்ற வள்ளுவரின் வாக்குப்படி அறநெறியில் நின்று வாழ்ந்தவர் காமராசர். நம் மனதில் இன்றும் நிலைத்துக்கொண்டிருக்கும் தலைவர்களுள் ஒருவர் கர்மவீரர் காமராஜர். தமிழகத்தைத் தலைநிமிரச் செய்வதற்காக அயராது உழைத்த தன்னலமற்ற தலைவர் காமராஜர். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு அரசியல் செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்த மாமனிதன் பெருந்தலைவர் காமராஜர் ஆவார்.

## கட்டுரைகள்

### இளமைக் காலம் :

**விருதுநகரின் வீரன் ...**

**படிக்காத மேதை ...**

**பகுத்தறிவுப் பகலவன் ...**

**எளிமையின் தலைவர் ...**

**மதிய உணவளித்த மகான் ...**

**கறைபடியாக் கரங்களுக்குச் சொந்தக்காரர் ... !**

என்றெல்லாம் அழைக்கப்படும் பெருந்தலைவர் காமராஜர் 1903 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் நாள் விருதுநகரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் குமாரசாமி நாடார், சிவகாமி அம்மாள் ஆவர். இவருடைய இயற்பெயர் 'காமாட்சி' என்பதாகும். அவருடைய தாயார் இவரை மிகுந்த நேசத்துடன் 'ராஜா' என்று அழைப்பார். அதுவே பின்னர் 'காமராசர்' என்று மாறியது. காமராசர் தனது ஆரம்பக் கல்வியை தனது ஊரிலேயே தொடங்கினார். 1908ஆம் ஆண்டு "ஏனாதி நாராயண வித்யா சாலையில்" சேர்க்கப்பட்டார். பின்னர் அடுத்த வருடமே விருதுபட்டியில் உள்ள "சத்ரிய வித்யா சாலா" பள்ளியில் சேர்ந்தார். ஆறு வயது இருக்கும்பொழுது தந்தை இறந்ததன் காரணமாகப் படிப்பைத் தொடர முடியாமல் படிப்பை நிறுத்திக்கொண்டார். பின்னர் ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்து அங்கிருக்கும்போது நாளிதழ்கள் படிப்பது, தலைவர்களின் சொற்பொழிவைக் கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

### காந்தி தரிசனம் :

காந்தி 1921இல் மதுரைக்கு வந்தபோது அவரைப் பார்த்த காமராசர் அவரையே தனது வழிகாட்டி என்று முடிவெடுத்தார். காமராசரிடம் வெளிப்பட்ட சுயமரியாதை, எளிமை, நேர்மை இப்படிக் கொண்டாடத்தக்க பல பண்புகளுக்கு உந்துசக்தியான காந்தியையும்

பின்னாளில் நேருவையும் தனது மனதில் உயர்ந்த பீடத்தில் வைத்திருந்தார் காமராசர். இளம் வயதிலேயே அவருக்கு இருந்த ஊக்கம் மிக்க தலைவனை அடையாளம் கண்டவர் சத்தியமூர்த்தி. தன்னுடைய தலைவராகச் சத்திய மூர்த்தியை வரித்துக்கொண்டார் காமராசர்.

### படைக்கு முந்து :

போராட்டங்களுக்கு அஞ்சாத மனிதர் காமராஜர். கேரளத்தில் 1923இல் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் நடந்தபோது, பிற்காலத் தமிழகத்தைச் செதுக்கிய இரு தலைகள் அதில் பங்கேற்றன. ஒருவர் பெரியார், இன்னொருவர் காமராசர். இவர் சிறைக்கும் அஞ்சியதில்லை.

**கஷ்டத்தை அனுபவிக்காமல்**
**எந்தவொரு மனிதரும்**
**அவரது இலட்சியத்தை**
**அடைய முடியாது !**

என்ற பொன்மொழிக்கு ஏற்ப தன் வாழ்வில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் சிறையில் இருந்தார். போராட்டங்களும் சிறை வாழ்க்கையும் காமராசரின் பூர்வீகச் சொத்துகளைச் செல்லரித்தன. தேசத்திற்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை திருமணம் செய்து கொள்வதில்லை என்று நண்பர்களுடன் சபதம் எடுத்துக்கொண்டவர். கடைசி வரை திருமணம் செய்துகொள்ளவில்லை. காமராசர் அகராதியில் தியாகம் இல்லாதபோது வாழ்வுக்கு எந்த அர்த்தமும் இல்லை.

### பூசல்களிடையே பூத்த பூ :

ஆங்கிலேயர் கால இந்தியாவில் நடத்தப்பட்ட தேர்தல்களை ஆரம்பத்தில் காங்கிரஸ் புறக்கணித்தது. பிறகு, தேர்தலில் பங்கேற்பது என்று முடிவெடுத்தது. 1936இல் நடந்த தேர்தலில் வெற்றிகளைக் குவித்தது தமிழ்நாடு காங்கிரஸ். 1936இல் நடைபெற்ற காங்கிரஸ்

மாநாட்டில் சத்தியமூர்த்தி தலைவர் ஆனார். காமராஜர் பொதுச்செயலர் ஆனார். 1937இல் சென்னை மாகாண சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடந்தது. விருதுநகரை உள்ளடக்கிய சாத்தூர் தொகுதியில் போட்டியின்றிக் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சத்தியமூர்த்திக்கும் ராஜாஜிக்கும் ஏற்பட்ட அதிகாரச் சண்டை தீவிரமானது. ராஜாஜியை எதிர்கொள்ள காமராசர்தான் பொருத்தம் என்று முடிவு செய்தார் சத்தியமூர்த்தி. 1940இல் காங்கிரஸ் இயக்கத்தின் தமிழகத் தலைவரானார் காமராசர்.

### மக்களின் முதல்வர் :

தமிழக காங்கிரஸில் சத்தியமூர்த்தி, ராஜாஜி என்று இரு மையங்கள் இருந்தன. முதல்வராக ஆட்சியை ராஜாஜி வைத்திருந்தாலும், கட்சியைத் தன் வசம் வைத்திருந்தார் சத்தியமூர்த்தியின் சீடரான காமராசர். ராஜாஜி இலவசக்கல்வித் திட்டத்தை அறிவித்தபோது கடும் எதிர்ப்பு உருவானது. காலையில் பள்ளியில் படிப்பு, மாலையில் அவரவர் குலத்தொழிலை மேற்கொள்வது எனும் முறை. இது எதிர்ப்பை எதிர்கொள்ள பதவி விலகும் முடிவெடுத்தார் ராஜாஜி. இக்கட்டான இந்தச் சூழல்தான் காமராசரை முதல்வர் இருக்கையை நோக்கி நகர்த்தியது. முதல்வரான உடனேயே குலக்கல்வி முறையை ஒழித்தார்.

“தனது பலவிதக் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சதா காலமும் நாட்டின் நலன்களிலே ஈடுபட்டுள்ள உள்ளத்தைப் பெற்றவரே சகல தர்மங்களையும், நீதிகளையும் நன்குணர்ந்தவரே காமராசு, காமராசு மகாபுருசர்” – காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகர சரசுவதி அவர்கள் காமராசரைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்.

### கல்விப் புரட்சி :

காமராசரின் சாதனைகளிலேயே மகத்தானது. தமிழக

வரலாற்றிலேயே கல்வித் துறையில் அதிகபட்ச வளர்ச்சியைக் கொடுத்தவர் அவர். அனைவருக்குமான இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். 1957-1962 இடைப்பட்ட காலகட்டத்தில் 13,000க்கும் மேற்பட்ட புதிய பள்ளிகளைத் திறந்தார். மாணவர் எண்ணிக்கை 19 லட்சத்தில் இருந்து 40 லட்சம் ஆக உயர்ந்தது. இந்தச் சாதனையைப் போற்றும் வகையிலேயே 2008 முதல் கல்வி வளர்ச்சி தினமான காமராசரின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

**"ஒரு பெண்ணுக்கு**
**கல்வி புகட்டுவது**
**ஒரு குடும்பத்திற்கே**
**கல்வி தருவதாகும்"**

என்று பெண்கல்வியைப் பற்றியும் பேசியுள்ளார்.

### முடியாது ... அது அகராதியில் கிடையாது :

அரசு அதிகாரிகளைக் காமராசர் கையாளும் விதம் சுவாரஸ்யமானது. விவசாயம், வளர்ச்சித் திட்டம் என்று எதுவாகயிருந்தாலும் இதைச் செய்ய முடியாது என்று எந்த அதிகாரியும் அவரிடம் சொல்ல முடியாது. முடியாதுன்னு சொல்ல நீ எதுக்குன்னேன்? என்பார். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் முழுச் சுதந்திரம் உண்டு. ஆனால், சாதிக்க வேண்டும் ; சாக்குப்போக்கு சொல்லக் கூடாது.

### மின்னிய பொற்காலம் :

தமிழகத்தின் தொழிற்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசர். தொழில் சூழலுக்கு மின் உற்பத்தி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்திய பெரியார் நீர் மின்னுற்பத்தித் திட்டம், குந்தா நீர் மின்னுற்பத்தித் திட்டம் எல்லாம் அவரது ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டவை. இன்றைக்குத் தேசிய அளவில் கொண்டாடப்படும் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமும் காமராசரின் பொற்கால ஆட்சியின்

விளைவேயாகும். மின்னுற்பத்தியில் சென்னை மாகாணத்துக்கு மூன்றாவது இடம் பெற்றுத் தந்ததும் அவரது சாதனைகளுள் ஒன்று.

**விவசாயிகளின் ஒளிவிளக்கு :**

ஒரு நல்ல ஆட்சியாளர் முதலில் விவசாயிகளைத்தானே கொண்டாடுவார் ? காமராசர் ஆட்சிக்கு வந்த உடனே நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1962இல் நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கும் மேல் வைத்திருந்தால் அவற்றை அரசுடைமையாக்க வழிவகுக்கப்பட்டது.

நீர் வளத்தைப் பெருக்க மணிமுத்தாறு திட்டம், கீழ்பவானி திட்டம், மேட்டூர் கால்வாய்த் திட்டம், அமராவதி திட்டம், ஆரணியாறு திட்டம், வைகைத் திட்டம், காவிரி கழிமுக வடிகால் திட்டம், புள்ளம்பாடி வாய்க்கால் திட்டம், புதிய கட்டளைத் திட்டம் உள்ளிட்ட ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்தார். தமிழகத்தின் பெரும்பாலான நதிநீர்த் திட்டங்கள் காமராசர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டவை.

**முடிவுரை :**

**“எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு**
**ஆவதில்லை, வரலாறாய் ஆனவர்கள்**
**தனக்காக வாழ்வதில்லை”**

என்ற பொன்மொழிக்குப் பொருந்தி வாழ்ந்த காமராசர் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்ப்பணித்துகொண்டார். காமராசர் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி தன்னுடைய 72வது வயதில் காலமானார். அதற்கு அடுத்த ஆண்டு “பாரத ரத்னா” என்ற இந்திய அரசின் மிக உயரிய விருது மத்திய அரசால் அவருக்கு வழங்கப்பட்டது.

சமூகத் தொண்டையே பெரிதாக நினைத்து வாழ்ந்த அவர்,

கடைசிவரை திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்ந்தார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுதும் இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்தார். அவருக்காக அவர் சேர்த்து வைத்த சொத்து சில கதர் வேட்டிகள், சட்டைகள், புத்தகங்கள் மற்றும் 150 ரூபாய் மட்டுமே. இப்படிப்பட்ட உன்னதமான நேர்மையான இன்னொரு தலைவனைத் தமிழக வரலாறு மட்டுமல்ல, உலக வரலாறும் இனி சந்திக்குமா என்பது சந்தேகமே.

இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதமர்களை உருவாக்கி, இந்தியாவின் கிங்மேக்கராகத் திகழ்ந்த பெருந்தலைவர் காமராசர், பகைவர்களும் மதிக்கும் பண்பாளராகவும், படிக்காத மேதையாகவும், கல்வியின் நாயகனாகவும், மனிதநேயத்தின் மறுஉருவமாகவும் திகழ்ந்தார்.

சினிமாவில் நாம் பார்த்து ஆச்சரியப்படும் ஹீரோக்களைப் போல இல்லாமல், நிஜ வாழ்க்கையில் உண்மையான ஹீரோவாக வாழ்ந்து காட்டியவர். அரசியலில் நேர்மை, வாய்மை, தூய்மை, நாணயம் என அனைத்தையும் கற்பித்த மாமனிதராக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டும் தலைவராக விளங்கியவர்.

**“உன்னைப்போல அரசியல்வாதி உலகில்**
**இல்லை, நிச்சயமாக உன்னைத்தவிர**
**உனக்கு நிகர் வேறுயாரும் இல்லை !!!”**



சி. புவனேஸ்வரி
*இளநிலை முதலாண்டு கணினி அறிவியல்*

# அழகியின் ரகசியம்

ரோமின் அரசி கிளியோபாட்ரா அழகின் நிறம் கருப்பு என்பதை, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டியவள்.

"நைல் நதி எகிப்தின் இதயத்தில் பாய்கிறது;

ஆனால் அந்த எகிப்தே இவளின் இதயத்தில் பாய்கிறது ...."

அவள்தான் பேரழகி என்று அழைக்கப்படும் "கிளியோபாட்ரா".

கிளியோபாட்ராவைப் பேரழகி என்று அழைப்பதற்குப் பதில் "கடைசி இராணி" என்று அழைப்பதே சிறந்தது. இவளது அழகுக் குறிப்புகளை ஆராய்ந்து பின்பற்றும் இவ்வுலகம், இவளின் பல நிழல்களின் அழகைப் போற்றவில்லை என்பது சிந்திக்கக் கூடியது ஆகும்.

கிளியோபாட்ரா "கடைசி இராணி" என்று அழைக்கப்படுவதன் காரணம், எகிப்தில் டாலமி-12 ராஜாவிற்கு 2-வது மகளாகப் பிறந்தாள். டாலமி-12 ராஜாவிற்குக் கிளியோபாட்ராவுடன் சேர்த்து 4 குழந்தைகள். கிளியோபாட்ரா தனது தந்தையின் விருப்பத்திற்கேற்ப அவரின் மரணத்திற்குப் பிறகு, தனது மூத்த அக்கா இருக்கும்போதே "எகிப்தின் அரசி" ஆனார். அப்பொழுது அவளுக்கு வயது 17. தனது தம்பியான டாலமி-13 கூட இணைந்து ஆட்சி நடத்தினார்.

அக்காலக்கட்டத்தில் ரோமிற்கும் எகிப்திற்கும் இடையே சண்டை நடந்துகொண்டிருந்தது. டாலமி-12 மரணத்திற்குப் பிறகு மிகவும் கடுமையானது அச்சண்டை. அச்சமயத்தில் ரோம் நாட்டில் மிக வலிமையான மகத்தான பேரரசர் ஜூலியஸ் சீசர் ஆட்சியில் இருந்தார். மிகச் சிறந்த அரசர் சீசர் ஆவார். அவர் எகிப்திற்குப் போர் தொடுக்க வந்தார். அப்பொழுது கிளியோபாட்ரா அழகில் விழுந்த அவர், போரைக் கைவிட்டார். பின்பு கிளியோபாட்ராவும், சீசரும் காதலித்தனர். இவர்களின் அன்பின் அடையாளமாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பின்பு சீசர் தனது நெருங்கிய நண்பனான "புரூட்ஸ்" ஆல் கொலை செய்யப்பட்டார். அக்காலக்கட்டத்தில் ரோமில் "சீசர்", "ஆண்டனி", "ஆக்டேவியன்" என்று மூன்று வேந்தர்கள் இருந்தனர். சீசர்

இறப்பிற்குப் பின்பு "ஆண்டனி" எகிப்திற்குப் போர் தொடுக்க வந்தார். பின்பு அவரும் கிளியோபாட்ராவின் அழகில் விழுந்தார். இவருக்கும் கிளியோபாட்ராவிற்கும் திருமணம் ஆகி மூன்று குழந்தைகள். பின்பு "ஆக்டேவியன்" உடன் நடந்த சண்டையில் மரணம் அடைந்தார். பின்பு கிளியோபாட்ரா தற்கொலை செய்துகொண்டு இறந்தாள் என்று வரலாறு கூறுகிறது.

கிளியோபாட்ராவின் அழகின் ரகசியம் என்று பல குறிப்புகள் கூறுகின்றன. அவள் கழுதைப் பாலில்தான் குளிப்பாள் என, இது போன்ற பல நூறு குறிப்புகள் வரலாற்றில் உள்ளன. ஆனால் அவளின் உண்மையான அழகைப் பெரிதளவில் யாரும் போற்றவில்லை என்பதே உண்மை.

எகிப்தில் இருக்கும் பெண்களிலேயே அழகைத்தாண்டி மிகவும் படித்த அறிவாளியான பெண் கிளியோபாட்ரா ஆவாள். இவளுடன் இணைந்து 4 குழந்தைகள் டாலமி – 12 அரசருக்கு இருந்தபோதும், டாலமி இவளை ராணி ஆக்கியதற்குக் காரணம் இவளுடைய அறிவு, படிப்பு மற்றும் தனது தந்தை போல் ஆட்சி செய்யும் குணம். அவள் இராணி ஆகும்போது வயது வெறும் 17. அவள் எகிப்தை மிகவும் நேசித்த இராணி ஆவாள். அவளது ஆட்சிக்காலத்தில் எகிப்து சிறந்து விளங்கியது. அதிலும் விவசாயத்தில் மிகவும் உயர்ந்து இருந்தது. பேரரசரான சீசர் இவளின் அழகையும் தாண்டி அவளுடைய தைரியம், அறிவு, ஆளும் திறமையைக் கண்டு வியந்தார். ஒருமுறை ரோமிற்கு சீசர் உடன் கிளியோபாட்ரா சென்றிருந்தாள். அக்காலத்தில் ரோமில் ஆண் ஆதிக்கம் நிறைந்திருந்தது. ஆனால் எகிப்தில் பெண்களுக்குச் சம உரிமை இருந்தது. அச்சமயத்தில் ரோமில் கிளியோபாட்ரா சீசர் உடன் ஒரு சபையில் இருந்தார்கள். அங்கு எந்தப் பெண்களும் சரிசமமாக நடத்தப்படவில்லை. இதைக்கூறி அங்கு இருந்த பலரும் பெண்கள் வீட்டில்தான் இருக்க வேண்டும் என்றும், பின்பு எகிப்து எப்பொழுதும் ரோமிற்குக் கீழ் எனவும் கேலி செய்தனர். அப்போது அவள், எகிப்து இல்லாமல் ரோம் இல்லை என்று அச்சபைக்குக் கர்வமாகச் சொன்னாள். பின்பு ஆண்டனியுடன் வாழ்ந்த காலத்தில்,

அவருடைய போரிற்குப் படைகள், உணவுகள் கொடுத்து உதவினாள். அதே சமயம் போரில் தோற்கும் நிலையில், அதே கிளியோபாட்ரா தான் கொடுத்த படைகளையும், உணவுகளையும் திருப்பிப் பெற்றுக்கொண்டாள். அதற்குக் காரணம் ஆண்டனி மீது இருந்த அன்பையும் தாண்டி நாட்டு மக்களின் பாதுகாப்பு முக்கியம் என்று நினைத்தாள். அந்த அளவிற்கு எகிப்து மக்களை நேசித்தாள். அவள் சீசர், ஆண்டனி இவர்களுடன் வாழ்ந்ததற்குக் காரணம் காதலையும் தாண்டி பல அரசியல் ரீதிக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும், தனது கூடப் பிறந்த உடன் பிறப்புகளிடம் இருந்து தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவும் செய்தாள். ஆண்டனி, ஆக்டேவியனுக்கு இடையே சண்டை நடந்து கொண்டிருந்தபோது ஆக்டேவியன் கிளியோபாட்ராவிற்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் ஆண்டனியைக் கொலை செய்துவிட்டால், அவளுடைய பதவியைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்றும் கூறினான்.

ஆனால் கிளியோபாட்ரா ஆண்டனி மீது இருந்த உண்மையான அன்பின் காரணமாகக் கொலை செய்யவில்லை. போரில் ஆண்டனி இறந்தான். பின்பு கிளியோபாட்ராவைச் சிறை பிடித்து ரோம் நாட்டில் இருக்கும் தெருக்களில் அவளைக் கைவிலங்குடன் மான பங்கம் செய்ய நினைத்தனர். இதை அறிந்த கிளியோபாட்ரா தற்கொலை செய்து இறந்தாள். ஏனெனில் அவள் தன்னுடைய கடைசி நிமிடம் வரையிலும் கர்வமாகத் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் என்று நினைத்தாள். பின்பு எகிப்தின் "**கடைசி இராணி**" என்று அழைக்கப்பட்டாள்.

வரலாற்றில் "வேலு நாச்சியார்", "ஜான்சி இராணி" என்று பலரும் இடம்பெற்றுள்ளனர். அதே போல் கிளியோபாட்ராவின் அழகையும் தாண்டி அவள் ஒரு சிறந்த இராணியாக இடம் பெற வேண்டும்.

"நான் ஒரு வெற்றியில் வழிநடத்தப்பட மாட்டேன்" – கிளியோபாட்ரா.

சு. இந்துமதி
*இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்*

# ஆறுவது சினம் (கோபத்தைத் தவிர்த்தல்)

பள்ளிக்குச் சென்று மாலை வீடு திரும்பினாள் மாலா. வீட்டின் மேசையில் கண்ணாடிப் பொம்மை ஒன்று இருந்தது. மிகவும் அழகாகவும், பச்சை, சிகப்பு, மஞ்சள் எனப் பல வண்ணங்கள் கலந்தும் இருந்தது அந்தக் கண்ணாடிப் பொம்மை. மாலாவின் அம்மா அந்தக் கண்ணாடிப் பொம்மையை எடுத்துக் கையில் கொடுத்தாள்.

மாலாவிற்கு அது மிகவும் பிடித்திருந்தது. மாலா வீட்டுப் பாடத்தை முடித்துவிட்டு அந்தப் பொம்மையுடன் விளையாடலாம் என்று வேகமாக எழுத ஆரம்பித்துவிட்டாள். அது அப்பாவின் நண்பர் வெளியூரில் இருந்து தனது நண்பருக்காக வாங்கி வந்த பொம்மை. மாலாவின் தம்பி விளையாடிக் கொண்டிருந்தான். மாலா அந்தப் பொம்மையில் ஒரு கண்ணும் பாடத்தில் ஒரு கண்ணுமாக இருந்தாள்.

அதைப் பார்த்துக்கொண்டு இருந்தபோது, மாலாவின் தம்பி அவள் பாடப் புத்தகத்தில் கிறுக்கிக்கொண்டு இருந்தான். அதைப் பார்த்த மாலாவிற்கு அதிக கோபம் வந்தது. அவனை அடிக்க பாடப் புத்தகத்தை எடுத்து எறிந்தாள். அது எதிர்பாராத விதமாக அந்தக் கண்ணாடிப் பொம்மையின் மீது பட்டு பொம்மை உடைந்துவிட்டது.

அம்மா வந்து பார்த்தபோது சிதறிக் கிடந்தது கண்ணாடிப் பொம்மை. அம்மா, அப்பா இருவரும் மாலாவிடம் "உன் கோபத்தால் நீ ஆசைப்பட்டதை நீ அழித்துவிட்டாய். உன் கோபம் அடுத்தவரைக் காயப்படுத்தாமல் நீ பார்த்துக்கொள். உன் கோபம் உன் வெற்றியை அழிக்கும்" எனப் பொறுமையாகச் சொன்னார்கள்.

மாலா தன் மீது உள்ள தவறு புரிந்து அழத் தொடங்கினாள். கோபத்தால் எந்தப் பயனும் இல்லை, கோபத்தை விட்டுப் பொறுமையைக் கையாளுங்கள். வெற்றி உனதே ....

# ஔவியம் பேசேல்
## (பொறாமை எண்ணத்தைக் கைவிடல்)

அன்று பள்ளியில் பல போட்டிகள் நடைபெற்றன. அதில் கீதா அனைத்துப் போட்டிகளிலும் முதல் பரிசு வாங்கினாள். தோழிகள் அனைவரும் அவளை வாழ்த்தினார்கள். வேணியும் கீதாவை வாழ்த்தினாள். வேணியும் பல பரிசுகளை வாங்கினாள்தான். கீதா அவள் பெற்றோரிடம் சென்று வாங்கிய பரிசுகளைக் காட்டி மகிழ்ந்தாள்.

அடுத்த நாள் பள்ளியில் பல போட்டிகள் நடந்தன. கீதாவும் கலந்துகொண்டாள். வேணியும் கலந்துகொண்டாள். ஆனால் கீதா இரண்டு பரிசுகள் மட்டுமே வாங்கினாள், அதுவும் இரண்டாம் இடத்தில். வேணி முதல் பரிசு வாங்கினாள். தோழிகள் அனைவரும் வேணிக்கு வாழ்த்து சொன்னார்கள். அது கீதாவுக்குப் பிடிக்கவில்லை. கீதா அவளின் தோழியிடம், “வேணியை அந்த ஆசிரியருக்குப் பிடிக்கும், அதனால்தான் முதல் பரிசு வாங்கினாள்” என்றாள். அதற்கு அவள் தோழி சொன்னாள், “இல்லை கீதா அப்படி பேசுவது தவறு. நேற்று நீ வெற்றி பெற்றபோது அவள் வாழ்த்தினாள். அவள் உழைப்புக்கு கிடைத்த பரிசு இந்த வெற்றி”.

“நேற்று நீ வெற்றி பெற்றபோது அவள் அப்படி சொல்லவில்லை. உன் எண்ணத்தை விட்டுவிடு. அவளை வந்து வாழ்த்து” என்றாள். கீதா தான் செய்த தவறைப் புரிந்துகொண்டாள் .....

வேணியை வாழ்த்தினாள்.



# ஏற்பது இகழ்ச்சி

## (பிறரிடம் கையேந்தக் கூடாது)

ராமு வசதியான வீட்டுப் பையன். தினமும் பள்ளிக்குக் காரில் தான் வருவான். கோபி ஏழை வீட்டுப் பையன். பள்ளிக்கு மிதிவண்டியில்தான் வருவான். ராமு எந்தவிதப் பாகுபாடுமின்றிக் கோபியிடம் பழகுவான். பள்ளியில் சுற்றுலா செல்ல பணம் வாங்கிவரச் சொன்னார்கள்.

ராமு சுற்றுலா செல்லத் தயாரானான். கோபி அப்பாவிடம் சென்று பணம் கேட்டான். அப்பா அதற்கு "நம்மிடம் தேவையான பணம் இல்லை, அடுத்த சமயம் பார்த்துக்கலாம்" என்று சொன்னார். கோபிக்குச் செல்வதற்கு ஆசை. கோபி அப்பாவிடம் சென்று, "அப்பா ராமுவிடம் பணம் கேட்டால் தருவான், அதை வைத்துச் சுற்றுலா செல்கிறேன்" என்றான்.

அதற்கு அப்பா, "அவன் பணம் கேட்டால் தருவான், ஆனால் அதுவே உன் பழக்கமாக மாறிவிடும். பிறரிடம் பணத்துக்காகக் கையேந்தக்கூடாது. அது மிகவும் தவறு. அவன் பாகுபாடு இன்றிப் பேசுவதால் நீ பணம் கேட்பது தவறு, அது உன் நட்பை அவமானப்படுத்துவதாக ஆகிவிடும்" என்று பொறுமையாகச் சொன்னார். கோபி புரிந்துகொண்டான்.



# ஓதுவது ஒழியேல்
## (படிப்பைத் தவிர்க்காதே)

கபிலன் பள்ளி முடிந்து வந்து டி.வி.யில் கார்டூன் பார்த்துக்கொண்டு இருந்தான். அம்மா அவனிடம் சென்று பாடப் புத்தகத்தைப் படிக்கச் சொன்னார். அவன் சிறிது நேரத்திற்குப் பின் செல்கிறேன் என்றான். ஆனால் அவனுக்குச் செல்ல மனம் இல்லை. இடைவேளையையும் ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்படியே தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்து வீட்டுப்பாடம் செய்ய மட்டுமே நேரம் இருந்தது. ஆங்கிலப்பாடத்தில் தேர்வு வேறு இருந்தது. ஆனால் அவனுக்குப் படிப்பதற்கு நேரம் இல்லை. ஸ்கூல் பஸ் வந்துவிட்டது. பஸ்ஸை விட்டுவிட்டான் என்றால் பள்ளிக்குச் சென்று விட்டு வருவதற்கு யாருமில்லை. வெகு தொலைவில் உள்ளது. பள்ளி நன்றாக இருப்பதால் தொலைவில் இருந்தாலும் பரவாயில்லை என்று மிகவும் கஷ்டப்பட்டு வாய்ப்பு வாங்கிக் கொடுத்தார் அவன் அப்பா.

பள்ளிக்குச் சென்றான், ஆங்கிலப் பாடத்தில் தேர்வு நடந்தது. கபிலன் எதுவும் எழுதவில்லை. ஆங்கில வகுப்பு ஆசிரியர் வகுப்பறையின் வெளியே நிற்க வைத்துவிட்டார். அது கபிலனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை, அவமானமாக இருந்தது அவனுக்கு. வீட்டிற்குச் சென்றான். அம்மா கபிலனைப் பார்த்ததும் புரிந்து கொண்டார்.

அவன் செய்த தவறுகளைக் கூறினாள், நீ படிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காததால்தான் இந்த அவமானம் உனக்கு நேர்ந்தது என்றாள். கபிலன் தான் செய்த தவறை உணர்ந்தான்.



ஆ. கீர்த்தனா
*இளநிலை இரண்டாமாண்டு வேதியியல்*

## சிறுகதை

# அம்மா சொல் கேள்!

ஒரு சிறிய கிராமத்தில் ஒருநாள் பொழுது விடிந்ததும், நிலன் என்ற ஓர் சிறுவன் தனது ஆடுகளைச் செழிப்பான ஒரு புல்வெளியில் மேய்த்துக்கொண்டிருந்தான்.

ஆடுகளை மேய்த்தவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கண்மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. வேலியோரம் ஒரு ஆட்டுக்குட்டி மேய்ந்துகொண்டிருந்ததைப் பார்த்த ஒரு ஓநாய் ஆட்டுக்குட்டியைத் தின்னும் ஆசையில் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போலப் பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஒரு ஆட்டுக்குட்டி, ‘ உனக்கு என்ன வேண்டும்?’ என்று கேட்டது.

ஓநாய், ‘நண்பா! இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும், சாப்பிடத் தோன்றுகிறது’ என்று வருத்தத்துடன் கூறியது.

‘அப்படியா! நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?’ என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக்குட்டி.

‘சேச்சே.... அதெல்லாம் சுத்தப் பொய்!’ என்றது ஓநாய். ‘அப்படியென்றால் இரு. நான் வெளியே வருகிறேன்’.

‘நாம் இரண்டு பேரும் சேர்ந்து மலையின் அந்தப்பக்கம் இருக்கும் இளம்புல்லைச் சாப்பிடலாம்’ என்று சொல்லிக்காண்டு வெளியே வந்தது.

உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. அந்த ஆட்டுக்குட்டி ஓநாய்க்கு உதவி செய்யப் போய்த் தனது உயிரை இழந்துவிட்டது.

நீதி : அனுபவம் நிறைந்தவரின் ஆலோசனை மிகவும் முக்கியம். தாயின் சொல் தரணியில் வாழ வைக்கும்.

ரா. மோனிஷா
*இளநிலை முதலாண்டு கணிதவியல்*

## சிறுகதை

# இவன் மாமனிதன்

வேலு ஒரு விவசாயி. அவன் உதவியென்று கேட்டு வருவோர்க்கு இல்லை என்று சொல்லாதவன். ஆனால் அவன் யாரிடமும் உதவியென்று கையேந்தி நிற்கக்கூடாது என்று நினைப்பவன்.

வேலுவிற்கு இரு மகள்களும் ஒரு மகனும் இருக்கின்றனர். கடன் வாங்க மாட்டான். வேலு அறுவடை முடிந்த பிறகு ஊருக்கே சோறு போடுவான். வேலு ஒருநாள் வீட்டுக்குப் பிச்சைக்காரனைக் கூட்டி வந்து தன் மனைவி முத்துவிடம் ‘ஏல முத்து இருவருக்கும் சாப்பாடு போடுல, என்னல பாக்குற சாப்பாடு போடு’ என்றான். ‘கடையில சாப்பாடு வாங்கித் தர வேண்டியதுதானே, இங்க எதுக்குக் கூட்டிட்டு வந்திங்க மாமா?’ என்றாள். “ஏல! குடிகாரனுக்குச் சோறு போடுவ, பசியில துடிக்கும் பிச்சைக்காரனுக்குச் சோறு போடமாட்டியா? குடிகாரன் செத்தா காசு கொடுக்குற அரசு பிச்சைக்காரன் பசியில செத்தா அத ஒரு பொருட்டாவே எடுத்துக்குறதுல்ல. ஏ பிச்சைக்காரன் செத்தா அது உயிர் இல்லையா. குடிகாரனுக்குக் குடுத்த காச பிச்சைகாரனுக்குக் கொடுத்தா நாட்டுல பிச்சைக்காரனே இருக்க மாட்டான், எல்லா உயிருக்குமே மதிப்பு கொடுக்கணுமுல, சோறு போடு, அவருக்கு ம்ம்....”

தன் வீட்டைச் சுற்றித் தென்னந்தோப்பு, தக்காளி, வெங்காயம், கத்தரிக்காய், வெண்டைக்காய், நெற்பயிர், வாழைத்தோப்பு இப்படி அனைத்தையும் விதைப்பான். பச்சைப் பசுமையாக இருந்தது அவன் தோட்டம்.

ஒரு கட்டத்தில் மழை பொழியவில்லை. காய்கறிகள் வதங்கின, கிணற்றில் தண்ணீர் வற்றியது, நிலம் வறண்டுவிட்டது, வருமானம் இல்லை. ஒரு விவசாயி விசம் குடித்துவிட்டான். கூறுகெட்டவன் எப்படியோ பொழச்சுட்டான்.

‘ஏல ராசு எதுக்குல இப்படி செஞ்ச; நீ போய்ட்டனா உன் பொண்டாட்டி பிள்ளை தெருவுல நிக்குமுல.’ ‘அண்ணே மழை பேயல, கிணத்துல தண்ணி இல்ல, பயிர் காஞ்சுப் போச்சு, காசு இல்ல, வட்டிகாரன் வந்து காசு கேட்டா நா என்ன அண்ணே செய்வே.’

‘லே ..... அடுத்த விளைச்சல் நல்லா இருக்குமுல சரியா நா .... வர்ரே.’ வீட்டுக்குப் போனான். மகள் ‘அப்பா, நா 12 வது ல 558 மார்க் எடுத்துருக்கேப்பா’னு சொன்னா. அவ 558 மார்க் எடுத்ததைவிட அடுத்து அவள படிக்கவைக்கணுமேங்குற கவலதா இருந்துச்சு. 10 வது வரைக்கும்தா அரசுப்பள்ளி இருக்கு. பெரிய மகள் 2 வருடம் பணம் கட்டிதா படிக்கவச்சார். சின்ன மகள் 10 வது முடிச்சுட்டா, அவளுக்குப் பணம் கட்டணும், காசு இல்லை. விவசாயமும் இல்லை.

வீட்டில் உள்ள ஆடு, மாடு போட்ட கன்றுகளை வித்துச் சின்ன மகளைப் பணம் கட்டிப் பள்ளிக்குப் போகச் சொன்னேன். வயலுக்குப் போய்விட்டு வந்துட்டு இருந்தேன். இந்த சிவலிங்கம் மகே பாண்டிய வண்டில திருவிகிட்டு வந்தா, ஏல என்னல இந்தப் பக்கமுனு கேட்டே. அவன் சொன்னா மாமா, ஏ அக்கா காலேஜ் போகுது. அத பஸ் ஏத்திவிட்டு வர்ரே மாமா; ஏல ஒங்க அக்கா எவ்வளோ மார்க்குன்னா 347 மாமானு சொல்லிட்டுப் போய்ட்டான். 347 மார்க் எடுத்த புள்ள படிக்கப் போகுது. 558 மார்க் எடுத்த ஏ புள்ளைய வீட்டுல சாணி அள்ளியாவது படிக்க வைக்கணுமுனு தோணுச்சு. வீட்டுக்குப் போனா என் பொண்டாட்டி அழுதுகிட்டே வந்தா, ஏல என்னல ஆச்சுனு கேட்டேன். ‘மாமா உழவு காளை உழவு காளை செத்துப் போச்சு மாமா’னு சொன்னா. காசு இல்ல, மாட்டுக்குச் சரியான தீவனம் போடல, வயலுல பச்சையில்ல, சரியா பராமரிக்காததால செத்துருச்சு. அது செத்தது ஏ குடும்பத்துல ஒருத்தர் செத்த மாதிரி இருந்துச்சு, என் மக என்னைச் சமாதானம் செய்தாள்.

என் பெரிய மகள் ரஞ்ஜி சரண்யாவைப் படிக்க வைக்க முடிவு செய்தேன். காசுதான் இல்லை. பேங்கில் லோன் வாங்கிப் படிக்க வைக்கலாமுல, நா பணம் வாங்கிதாரே, ஏ மகே பேங்கிலதா வேல செய்யிரானு சாமிகண்ணு சாமி போல வந்து சொன்னான். பணம் வாங்கி ரஞ்ஜி சரண்யாவ படிக்க அனுப்பினேன். மாசம் 5 தேதினா பணம் கட்டணும். வீட்டுக்கு வந்தவுங்களுக்கும் வேலை செய்யிரவங்களுக்கும், வெட்டித்தர்ற எளனிய ஒரு கட்டத்துல வெட்டி விற்க ஆரம்பிச்சேன். தென்னம்பிள்ளை காய்க்கும் வறண்ட என் நிலத்தில் சிறு புன்னகை. மழை பெய்தது. கடவுள் மனம் இறங்கிவிட்டான். உழவு செய்யக் காளையில்லை. நான் என்ன

செய்வேன். அப்பதா ஒரு யோசனை வந்துச்சு. சொக்கரிடம் வட்டிக்குக் கடன் வாங்கிக் காளைமாடு வாங்கினேன். உழவு செய்யத் தொடங்கினேன். என் மகள் ரஞ்ஜி சரண்யா அப்பா பணம் கட்டாததுனால நாளைக்குப் பணம் கட்டிட்டுனு சார் சொல்லிட்டாரு அப்பானு சொன்னா. எப்படி கட்டுவேன். ஏ கிட்டதா காசு இல்லையேன்னு நினைச்சேன். நடவு செய்ய வந்தா ஆளுங்களுக்குக் காசுதரணுமே. நா, என் மனைவி, என் மகள்கள், மகன் நாங்களே நடத்தொடங்கினோம்.

ரேசன் அரிசிச் சாப்பாடு. 10 ரூபாய்க்கு மாட்டுக்கு வாங்கிட்டு வர்ற தக்காளி, காய்கறிகளைச் சுத்தம் செஞ்சுச் சமச்சுச் சாப்பிட்டோம். என் சின்ன மகள் மலர் சொன்னாள், ரேசன் அரிசிச் சாப்பாடு, அழுகிப்போன காயாக இருந்தாலும் அப்பாவின் சமையலுக்கு நான் அடிமை என்றாள். தேதி 15 ஆகிவிட்டது, லோன் கட்டவில்லை. சொக்கருக்கு வட்டி கட்டணும். கவலையிருந்தாலும் என் மகன் மாமரத்து அடியில் என் மடியில் படுத்துக்கொண்டு 'அப்பா நான் படித்து அரசியல் செய்ய போறேன்ப்பா, விவசாயிக்கு நானே விவசாயம் செஞ்சு சோறு போடுவே, நிலம் வறண்டு போனா நன்கொடை கொடுப்பே, மக்களுட்ட ஒவ்வொரு முறையும் சொல்லுவேன், கடவுளுக்கு நன்றி சொல்வதைவிட விவசாயிக்கு நன்றி சொல்லுங்கள், கோவிலுக்குச் செலவு செய்வதைவிட விவசாயிக்கு நன்கொடை குடுங்கனு சொல்லுவேன் அப்பா' ஏ மகன் படிச்சு வேர்வ சிந்தாம ஏசி ரூம்ல வேலபாக்கணுமுலனு சொன்னேன்.

**ஊருக்கே சோறு போட்ட விவசாயிக்குச்**
**சோறுபோட நாதியில்லை – அன்று**
**பிச்சைகாரனுக்குச் சோறு போட்ட விவசாயி**
**சோற்றுக்காகப் பிச்சையெடுக்கிறான் இன்று**



உழைத்தால் ஊதியம் உண்டு என்று சொல்வார்கள். அதுபோல என் பயிர் எப்பொழுதையும் விட அதிகமாகவே விளைந்திருந்தது. அறுவடை செய்யும் வேளையில் மழை பெய்தது, வெள்ளம் திரண்டது, என் பயிர் மண்ணோடு மண்ணாய்

## சிறுகதை

மூழ்கியது, வாழைமரம் ஒடிந்தது, தென்னம்பிள்ளை சாய்ந்தது, மாமரம் வானைப் பார்த்து வேருடன் தூங்கியது. எல்லாமே மண்ணோடு மண்ணாய்ப் போச்சு. 2 மாசத்துக்கு முன்னாலயே வட்டிகட்டி 5 மாசத்துக்கு மேல ஆச்சுல நாயேனு காளைய புடுச்சுட்டு போய்டான் சொக்கர். லோன் கட்ட பணம் இல்லனு 4 மாசத்துக்கு முன்னால வீட்டுபத்திரத்த அடகுவச்சேன். அதுக்கு வட்டி கட்டல. லோன்காரன் வந்து காசு கேட்டா நா என்ன செய்வேன் ஐயோ, நா பயிர நம்பித்தானே இருந்தேன். மனதில் குழப்பம். கண்ணுல அரளி வித தென்பட்டுச்சு, அரச்சுக் குடிச்சுட்டேன். சாவரத்துக்கு ஒரு சில நிமிடத்துக்கு முன்னாடி யோசித்தேன். கடன் கட்டமுடியலனு இந்த முடிவ எடுத்தேன், ஆனா என் புள்ள இத எப்படி சமாளிக்கப் போறானுத் தெரியலன்னு.

ராசுக்கிட்ட சொன்னேன் இது தப்பான முடிவுனு. ஆனா நா இந்த முடிவ எடுத்துட்டு இவ்வுலகில் வாழ்வது சிரமம்னு சாவது எளிது, ஒரு பிரச்சனையைச் சமாளிக்க முடியலனு விட்டா அது உங்கள தொரத்திக்கிட்டேதா வரும். கடன் வாங்கி ஏமாத்துன கார்ப்ரேட் கம்பெனிக்காரன் கோட் சூட் போட்டுட்டு நல்லா வாழும்போது, ஊருக்கே சோறுபோடுறத்துக்காக சட்ட, செருப்ப கழட்டி வச்சுட்டு வேலபாக்குற விவசாயி ஏன் சாகணும், அடுத்த தலைமுறையே விவசாயியைக் காப்பாற்றுங்கள்.

**மண்ணைப் பொன்னாக்கும் தேவர்கள்**
**மனிதனின் பசியைப் போக்கும் தெய்வங்களே**
**உங்களை வணங்கத்தான் வேண்டும்**
**காலடியில் போட்டு மிதிக்கின்றோம்**
**உணவுதரும் அம்மாவை நினைக்கின்றோம்**
**உணவையே உருவாக்கும் விவசாயியை மறக்கின்றோம்**

கண்டவரிடம் கையேந்தி நிற்பதைவிட அடுத்த தலைமுறையான உங்களிடம் கையேந்திப் பிச்சை கேட்கிறேன். விவசாயிகளைக் காப்பாற்றுங்கள். அனைவருக்கும் சோறுபோட நினைக்கும் விவசாயி தெய்வங்களை விட உயர்ந்தவன். அவன் மாமனிதன்.

P. ஹேமலதா
*இளநிலை முதலாண்டு நுண்ணியிரியியல்*

சிறுகதை

# அம்மா

அழகிக்குத் திருமணமாகி ஒரு மாதம்தான் ஆகிறது. ஆனால் அவள் முகத்தில் சிறிதும் மகிழ்ச்சி இல்லை. மரத்தடியில் இருந்து எதையோ எண்ணிக் கவலைப்படுகிறாள். ஆம் அவள் இழந்த அம்மாவை எண்ணி அழுதுகொண்டு இருக்கிறாள்.

**ஒரு வருடத்திற்கு முன்**

அழகி பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தாள். அழகியின் அம்மா ராஜாத்தி கிராமத்து வேலை அனைத்தும் செய்பவள். அவளைத் தெரியாத ஊர்மக்கள் இல்லை. அழகியின் அக்கா இருவருக்கும் திருமணம் நடந்த சில நாட்களில் ராஜாத்திக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. ராஜாத்தி தன் கணவனுடன் பல மருத்துவமனை ஏறி இறங்கினாள். ஆனால் அவளது உடல் நலம் பெறவில்லை. அழகி பள்ளிக்குச் செல்வது, மீண்டும் வீட்டிற்கு வந்து வேலை செய்வது என ஒரு வாரம் சென்றது. உறங்கிய அழகியின் தாய் மறுநாள் இறந்துவிட்டாள். தாயின் இறப்பு அழகியின் வாழ்வை இருட்டாக்கியது. மனைவி இறந்தால் கணவன் புதுமாப்பிள்ளை என்பது அழகியின் வாழ்வில் உண்மையானது. ராஜாத்தி இறந்த நான்கே வாரத்தில் அழகிக்குத் திருமண ஏற்பாடு நடக்கிறது. மாப்பிள்ளை பற்றிச் சரியாக விசாரிக்காமல் திருமணம் முடிந்தது. அழகிக்குத் திருமணம் முடிந்த பதினைந்து நாட்களில் அவள் அப்பாவிற்குத் திருமணம் நடந்தது. அழகியின் கணவன் தினமும் குடிப்பது, பொருட்களை உடைப்பது என்றே இருப்பார். ஒரு வேலைக்கும் இரண்டு நாளுக்கு மேல் செல்வதில்லை. கணவரிடம் அடி பெற முடியாமலும் அப்பா வீட்டிற்குச் செல்ல முடியாமலும், என் தாய் இருந்திருந்தால் நான் படித்திருப்பேன், வேலைக்குப் போக வேண்டும் என்ற என்னுடைய கனவும் நிறைவேறி இருக்கும் என்று எண்ணி அழுது கொண்டு இருக்கிறாள்.

**அப்பாவின் இறப்பு**
**அரை உணவைக் குறைக்கும்**
**அம்மாவின் இறப்பு**
**அரை வாழ்வையே குறைக்கும்**

நா. ஆர்த்தி
*முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

சிறுகதை

# அப்பாவின் கனவு

பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றதற்குத் தேவிக்கு மறுநாள் பத்தாயிரம் ரூபாய் பரிசு பள்ளியில் வழங்கப்பட உள்ளது. ஆனாலும் அவள் முகத்தில் மகிழ்ச்சியே தோன்றவில்லை. எதையோ இழந்தவள் போல் காணப்பட்டாள். ஆம் அவள் அழுதுகொண்டே இருக்கிறாள்.

**ஏழு வருடத்திற்கு முன்**

நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். அவளது அப்பா மருந்தகம் ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தார். அம்மா வீட்டில் வேலை பார்த்துக்கொண்டு இருப்பவள். வேலைக்குச் சென்ற செல்வம் வீடு திரும்பும்போது குடித்துவிட்டுத்தான் வருவார். வீட்டிற்குத் தேவையான அனைத்து விதமான பொருட்களையும் வாங்கி வருவார். காலையில் அன்பாக இருக்கும் அப்பா இரவில் மட்டும் நம்மைத் துன்புறுத்துவது ஏன்? என்று தன் அண்ணனிடம் பகிர்வதும் உண்டு. வழக்கம்போல் தன் அண்ணனுடன் பள்ளிக்குச் செல்கின்றாள்.

மறுநாள் அவர் வீட்டின் அருகில் ஒரு பாட்டி இறந்துவிட்டாள். அவர்களுக்கு முறை செய்ய வேண்டுமென்று எண்ணித் தன் மனைவியின் நகையை அடகு வைப்பதற்குச் சென்றார். நகை பத்தாயிரம் ரூபாய்க்கு அடகு வைத்துவிட்டுப் போதை மிகுந்த மனிதனாக வீடு திரும்புகிறார். இரவு வீட்டில் தன் மனைவியுடன் சண்டையும் போடுகிறார். அச்சண்டையின் காரணமே அடகு வைத்த சீட்டைக் காணவில்லை என்றுதான். காலையில் போதை தெளிந்தபின் தேடுகிறார், கிடைக்கவில்லை. ஆதலால் மனைவி அவள் அம்மா வீட்டிற்குச் சண்டை போட்டு விட்டுப் போய்விட்டாள்.

தன்னுடைய தவறை உணர்ந்து மனம் வருந்தி, இனிமேல் நம் மனைவி நம்முடன் வாழமாட்டாள் என்று எண்ணித் தெளிந்த மனிதன்

தானே தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவர் இறக்கும் முன் ஒரு கடிதம் எழுதினார். தான் பெற்ற மகன், மகள் இருவரையும் கண் போன்று பார்த்துக்கொள், நன்றாகப் படிக்கும் ஆற்றலை உடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆதலால்தான் தன் அப்பாவின் ஆசையை நிறைவேற்றினாள். நாளை பரிசினையும் பெறப் போகிறாள். ஆனால் பக்கத்தில் அப்பா இல்லை என்று மனம் வருந்துகின்றாள்.

**அடுத்த ஜென்மத்திலும்**
**உன் மகளாகப் பிறக்க வேண்டும்**
**அப்போதாவது தொலைந்து**
**போகாமல் என்னுடனே இருந்திடு**
**அப்பா ! அப்பா !!**

சி. சௌமியா
*முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*



# பொதுஅறிவு

1. கால்குலேட்டரைக் கண்டுபிடித்தவர் யார் ?
**பாஸ்கல்**

2. இந்தியாவில் மட்டும் காணப்படும் விலங்கு எது ?
**நீலகிரி தாஹ்ர் மான்**

3. தொட்டவுடன் இறக்கும் பறவை எது ?
**டைட்டோனி பறவை**

4. உலகில் அதிக விலை கொண்ட விலங்கு எது ?
**பந்தயக்குதிரை**

5. எந்த விலங்குகளுக்கு ஆதார் அட்டையை உருவாக்கலாம் ?
**கோலா**

6. முயல் எந்த நாட்டின் தேசிய விலங்கு ?
**நார்வே**

7. அரிசி நாடு என்று அழைக்கப்படுவது எது ?
**தாய்லாந்து**

8. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருது எது ?
**ஞானபீட விருது**

9. உலகில் மிகப்பெரிய மலர் இனம் எது ?
**ரப்லேசியா அர்னால்டி**

10. உலகிலேயே மிகச்சிறிய தீவாக உள்ள நாடு எது ?
**நவுரு தீவு**

பா. சுதர்ஷினி
*இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்*

# பொதுஅறிவு

1. பெட்ரோலை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டு அமைப்பு **OPEC** எனப்படும்.

2. **OPEC** என்பது ஆர்கனைசேசன் ஆப் பெட்ரோலியம் எக்ஸ்போர்டிங் கன்ட்ரிஸ்.

3. இந்தியா இக்கழகத்துடன் ஆண்டுதோறும் ஒப்பந்தங்கள் செய்து சீராக **எரிபொருள்** கிடைக்கச் செய்கிறது.

4. கடினத் திரவமாகவோ, வாசனையோ, வண்ணமோ அற்ற பொருளாகவோ விளங்குகிறது, **பெட்ரோல்.**

5. குறும்பனை மரங்களின் காய்களிலிருந்து பெறப்படும் எண்ணெய் **பாமாயில்** எனப்படும்.

6. பாமாயில் எண்ணெய் அதிகளவு **மலேசியாவில்** தயாரிக்கப்படுகிறது.

7. பனை எண்ணெயில் **Transfatty** என்ற கேடு தரும் அமிலம் இல்லை என்பதால் உணவுக்கு ஏற்றதாகும்.

8. எழுத்துக்களை **தோல், மரப்பட்டை, ஓலை, கல்** போன்றவற்றில் முன்னோர்கள் எழுதினர்.

9. எழுத்துருக்கள் **இரும்பு, அலுமினியம்** அல்லது **அலாய்** கொண்டு தயாரிக்கப்பட்டன.

10. மழை பெய்யும்போது கல்லைப் போன்று ஐஸ் கட்டிகளாக விழும். இதுவே **கல்மாரி மழை** எனப்படும்.

11. **கிளிசரால்** எனப்படும் **கிளிசரின்** நம் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் வேதிப்பொருட்களில் ஒன்றாகும்.

12. ஆஸ்கர் பரிசுகளில் அதிகமான பரிசுகள் பெற்ற முதல் படம் **பென்வரர் (1959).**

## பொதுஅறிவு

13. ஹாலிவுட் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் **அகாடமி ஆப் மோசன் பிக்சர்ஸ் ஆப் ஆர்ட்** மற்றும் **சயின்ஸ்** என்ற அமைப்பின் மூலம் பரிசு வழங்கப்படுகிறது.

14. பல நாடுகள் ஒன்று சேர்ந்து அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டதுதான் **உலக வங்கி** ஆகும்.

15. 1945இல் ஐக்கிய நாடுகள் சபை **வாஷிங்டனில்** தொடங்கப்பட்டது.

க. அபிதா

*முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

## பழமொழிகள்

- ❖ பதறாத காரியம் சிதறாது.
- ❖ படுக்கை காபி, படுக்கையில் தள்ளும்.
- ❖ சீரகம் இல்லாத உணவு சிறக்காது.
- ❖ தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.
- ❖ கோல் ஆட, குரங்கு ஆடும்.
- ❖ சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.
- ❖ வெந்து கெட்டது முருங்கை, வேகாமல் கெட்டது அகத்தி.
- ❖ எறும்பு ஊர கல்லும் தேயும்.
- ❖ ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- ❖ கற்காதவன் அறியாதவன்.

இரா. அபிநயா

*இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியியல்*

## பொன்மொழிகள்



ஒரு முறை வந்தால் அது கனவு
இரு முறை வந்தால் அது ஆசை
பல முறை வந்தால் அது லட்சியம்

– ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

தோல்வியில் கசப்பான மாத்திரையை
ஒருவர் ருசிக்காதவரை,
வெற்றிக்காக ஆசைப்பட முடியாது
என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

– ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

படித்தல் என்பது ஒரு சிறந்த வாழ்க்கையை
வாழ்வதற்கான அடிப்படைக் கருவியாகும்.

– ஜோசப் அடிசன்

தோல்விகளுக்கு இடையில்தான்
வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன
அதனால் தோல்விகளைக் கண்டு
அஞ்சாதே !

– ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

கு. லிஷா
*இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல்*

# விடுகதைகள்

1. வெள்ளை முத்துக்குப் பச்சை ராணி, அது என்ன ?
**வெண்டைக்காய்**

2. தண்ணீரிலும் இருப்பான், தரையிலும் இருப்பான், அவன் யார் ?
**படகு**

3. நீரிலும் இருப்பான், நிலத்திலும் இருப்பான், அவன் யார் ?
**தவளை**

4. இடி இடிக்கும், மின்னல் மின்னும், ஆனால் மழை பெய்யாது, அது என்ன ?
**பட்டாசு**

5. எட்டாத வெண்ணிலா எங்கள் வீட்டு அடுப்பிலே, அது என்ன?
**தோசை**

6. சிவப்பாய் இருப்பான், தெருவில் நிற்பான், திறந்தவாய் மூடமாட்டான், அவன் யார் ?
**தபால் பெட்டி**

7. ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர், அது என்ன ?
**இளநீர்**

8. ஒரு வீட்டிற்கு இரண்டு வாசல் படி, அது என்ன ?
**மூக்கு**

9. ஊர் முழுவதுக்கும் ஒரே விளக்கு, அதற்கு ஒரு நாள் ஓய்வு, அது என்ன ?
**நிலா**

10. உருளும் வீட்டைச் சுற்றி வேலி, அது என்ன ?
**கண் இமை**

11. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான், மற்றொருவன் நடப்பான், அவர்கள் யார் ?
**கடிகார முட்கள்**

12. தலையைச் சீவினால் திறப்பான், அவன் யார் ?
**இளநீர்**

# விடுகதைகள்

13. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது, அது என்ன ?
**தேங்காய்**

14. இவள் நிறம் சிகப்பு, குளித்தால் கருப்பு, அது என்ன ?
**அடுப்புக்கரி**

15. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி, அது என்ன ?
**முட்டை**

16. சொன்ன நேரத்துக்குத் தொண்டை கிழியக் கத்துவான், அவன் யார் ?
**அலாரம்**

17. டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு காசு வாங்காம போனாரு, அது என்ன ?
**கொசு**

18. வாயிலே தொடங்கி, வாயிலே முடியும் பூ, அது என்ன ?
**சிரிப்பு**

S. பிரித்திகா
*முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

1. ஆலமரம் தூங்க, அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க, திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை. அவர் யார் ?
**மூச்சு**

2. காலையிலும், மாலையிலும் நெட்டை, மதியம் மட்டும் குட்டை, நான் யார் ?
**நிழல்**

3. நூல் நூற்கும் நெசவாளிக்குக் கட்டிக்கொள்ளத் துணியில்லை, அது என்ன ?
**சிலந்தி**

4. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும், அவர் யார் ?
**தேள்**

5. எனக்குப் பல கிளைகள் உண்டு. ஆனால் பழம், தண்டு, இலை இல்லை, நான் யார் ?
**வங்கி**

ரா. ஜனனி
*இளநிலை இரண்டாமாண்டு நுண்ணுயிரியியல்*

# மருத்துவக்குறிப்புகள்

1. **கொய்யா இலை :**

இளம் கொய்யா இலையைக் கழுவிச் சிறிதளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து அந்தக் கொதித்த நீரைப் பருகினால் சர்க்கரை நோய் குணமடையும்.

2. **முருங்கைக் கீரை :**

ஒரு கைப்பிடி முருங்கைக் கீரையை ஒரு டீ ஸ்பூன் நெய்யில் வதக்கி, மிளகு மற்றும் சீரகம் பொடித்துப் போட்டுத் தினமும் காலையில் சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட ஹீமோகுளோபின் அளவு பல மடங்கு அதிகரிக்கும்.

3. **குப்பைமேனி :**

இருமல் மற்றும் சளியால் மூச்சு விடமுடியாமல் சிரமப்படும் குழந்தைகளுக்குக் குப்பை மேனியின் சாற்றைப் பிழிந்து கொடுத்து வர சளிப் பிரச்சனை தீர்ந்து விடும்.

4. **நெய் :**

காலையில் வெறும் வயிற்றில் நெய் சாப்பிட்டால் செல்களின் செயல்பாட்டை அதிகரிக்கும். முடி உதிர்வதைத் தடுக்கும்.

5. **சுக்கு :**

சுக்குடன் சிறிது பால் சேர்த்து மையாக அரைத்து நன்கு சூடாக்கி இளஞ்சூடான பதத்திற்கு ஆறினதும், வலியுள்ள கை, கால் மூட்டுகளில் பூசி வர மூட்டுவலி முற்றிலும் குணமாகும்.

6. **கொள்ளு :**

கொள்ளுப்பருப்பை ஊற வைத்த நீரைப் பருகினால் உடலில் தேங்கிக் கிடக்கும், கெட்ட நீர் வெளியேறிவிடும். கொழுப்பு மற்றும் ஊளைச் சதையைக் குறைத்துவிடும்.

7. **பீட்ரூட் :**

பீட்ரூட் கிழங்கின் சாற்றுடன் சிறிது தேனும் கலந்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண் குணமாகும்.

8. **சப்போட்டா :**

சப்போட்டா பழத்தைத் தின்று, பின்னர் ஒரு தேக்கரண்டி சீரகத்தை நன்று மென்று விழுங்கினால் பித்தம் விலகும்.

## மருத்துவக்குறிப்புகள்

9. **மாதுளை :**

ரத்தம் சுத்தமாகும், புதிய ரத்தம் சுரக்கும், உடல் பலம் பெருகும், எலும்புகள் பற்களில் ஏற்படும் நோயைக் குணமாக்கும், மலச்சிக்கலைத் தடுக்கும்.

10. **வெந்தயம் :**

இரவில் தூங்குவதற்கு முன் ஒரு சிட்டிகை அளவு வெந்தயத்தை எடுத்து 200 மி.லி நீரில் ஊற வைத்துவிடவும். பிறகு மறுநாள் காலையில் எழுந்து வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர உடல் சூடு குறையும்.

வெந்தயப் பொடியைத் தயிருடன் சேர்த்து முகத்தில் தடவி வர முகம் பொலிவுடன் இருக்கும்.

க. கோமதி
*இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியியல்*

1. புளியம்பட்டை, காஞ்சிராம்பழம் மற்றும் அரச இலை ஆகியவற்றை எரித்து மிதிக்க குதிங்கால் வலி நீங்கும்.
2. நகச் சுற்றிற்கு எலுமிச்சை பழத்தைத் துளையிட்டு விரலில் மாட்ட வீக்கம் குறையும்.
3. சிறிது புளிக்கரைசல் மற்றும் மஞ்சள்பொடி சேர்த்து கொதிக்க வைத்துப் பயன்படுத்த இரத்தக் கட்டு குணமாகும்.
4. அடுப்புக்கரி மற்றும் உப்பு சேர்த்துத் தேய்க்கப் பற்கள் தூய்மையாகும்.
5. ஆவாரம்பூ இலையை இரவு ஊறவைத்துப் பின் பகலில் அரைத்துத் தேய்க்கக் கூந்தல் கருமையாக வளரும்.



அ. சுமதி
*இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல்*

# ஓவியங்கள்



**த. தாரணி**

*முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*




**ர. பவதாரணி**

*இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல்*



**ச. ஹரிணி**

*இளநிலை முதலாண்டு கணினி அறிவியல்*



**ரா. இலக்கியா**

*இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல்*

# ஓவியங்கள்




பொ. இமயா

*இளநிலை இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்*




ச. இந்துராணி

*இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்*



த. ஜனனி

*முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*





– பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்

எஸ். ஜெயஸ்ரீ

*இளநிலை முதலாண்டு தமிழிலக்கியம்*


# ஓவியங்கள்





வ. பிரியதர்ஷினி

*இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல்*



ர.செ. ஸ்ருதி

*இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்*



ரா. பிரதீபா

*இளநிலை முதலாண்டு தமிழிலக்கியம்*




அ. சுமதி

*இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல்*

# ஓவியங்கள்






**ஹை. ரோஷினி**

*இளநிலை இரண்டாமாண்டு தகவல்தொழில்நுட்பவியல்*


**சி. ஷர்மிளா**

*இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல்*



**ப. ஸ்வேதா**

*முதுநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*



**ஜெ. அபிநயா**

*இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல்*

# பொன்மொழி

வாழ்க்கை என்பது

ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்

ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்

ஒரு இலட்சியம் - சாதியுங்கள்

ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்

ஒரு போராட்டம் - வென்று காட்டுங்கள்

ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்



## பாலபுரஸ்கார் விருது பெற்ற **யூமா வாசுகி - 2024**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **யூமா வாசுகி** |
| இயற்பெயர் | : | **தி. மாரிமுத்து** |
| பிறப்பு | : | **23.06.1966** |
| கல்வி நிலையம் | : | **அரசு கவின் கலைக்கல்லூரி** |
| எழுதிய படைப்புகள் | : | தோழமை இருள்<br>அமுத பருவம் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு<br>உயிர்த்திருத்தல்<br>ரத்தஉறவு |
| பெற்ற விருதுகள் | : | கசாக்கின் இதிகாசம்<br>சாகித்ய அகாடமி - 2017<br><br>தன்வியின் பிறந்தநாள்<br>பாலபுரஸ்கார் விருது - 2024 |

கிருஷ்ணா பிரிண்டர்ஸ்